MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR M/s. PCS INDUSTRIES PRIVATE LIMITED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY, AT S.F. No. 223/1, 223/2, 224, 225/1, 225/2 IN PERIYAVENMANI VILLAGE, MADURANTHAGAM TALUK, CHENGALPATTU DISTRICT.

---

| | |
|---|---|
| Venue: | Sri Saraswathi Mahal,<br>Maduranthagam Road,<br>Saravambakkam Village,<br>Maduranthagam Taluk, Chengalpattu District. |
| Chairperson: | Thiru. A. Thiagarajan<br>Revenue Divisional Officer, Maduranthagam.<br>Chengalpattu District. |
| Convener: | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Chengalpattu District. |
| Participants: | Public & NGO's.<br>(Total Nos: 66) - (Annexure-1) |

The District Environmental Engineer welcomed the Revenue Divisional Officer, Maduranthagam, Chengalpattu District who has come to preside over the Public Hearing as instructed by the District Collector, Chengalpattu. The District Environmental Engineer has also welcomed the Public and the NGOs who have come to participate the Public Hearing conducted for the proposed project of M/s. PCS Industries Private Limited, for the Rough Stone and Gravel Quarry at S.F.NO. 223/1, 223/2, 224, 225/1, 225/2, Periyavenmani Village, Maduranthagam Taluk, Chengalpattu District.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board stated that the views, suggestions and queries of the public and reply of the project proponent will be recorded through videography and same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu. It was also announced that the public can express their views in writing also.

The Revenue Divisional Officer, Chengalpattu District (Representative of the

District Collector, Chengalpattu) has initiated the public hearing process. Further the District Environmental Engineer and Revenue Divisional Officer have requested the project proponent to explain about the proposed project.

Thereafter, M/s. Geo Technical Mining Solutions - Dharmapuri who have prepared the Draft Environmental Impact Assessment for the project of M/s. PCS Industries Private Limited, for the proposed Rough Stone and Gravel Quarry gave a detailed video presentation on the operation of the Rough Stone and Gravel Quarry Project and the Environmental Management Plan proposed to be undertaken during its operation

The Revenue Divisional Officer and District Environmental Engineer have invited the public to express their views in writing also and comments about the proposed Rough Stone and Gravel quarry.

**Views and suggestion of public are detailed below:**

1. Thiru. Kamalakannan, Periyavenmani Village has questioned the public to raise the hands who are working in the industry and also he said that no one knows about the public hearing meeting. He informed that the village has around 2000 people and 2000 animals (cows & sheep). The water from Poondi lake which is in the west side of the proposed site leads to the agriculture lands through quarry site. Water channel will be blocked due to quarrying operation and around 7 to 8 villages will be affected.

   Further, he said that around 200 houses are located in the viral panchayat and water storage tank facilities will be affected due to quarrying operation. Also he said that pancha pandavar temple, nagulan temple, sivan temple, Vaitheeswaran temple pond inside the temple will be affected. In Northern side, around 150 houses are there and Government porambokku land which is located inside the quarry. Further he informed that around 23 acre of Government land encroached by the proponent.

   Further, dust arises from quarry site spreads even in food also and he warned that if the Government Officials granted permission for the quarry, then he will file a case against the governments official.

2. Thiru. Madhan, Periya Venmani has informed that the ground water table is already in the depth of 20 feet itself in the Periya Venmani village, whereas the depth of mining proposed upto 35 m. Further the consultant who have done the presentation on Environment impact

assessment has not covered details of the Air, water, land and soil quality properly. Further, he reported that dust deposits will be emanated due to the proposed quarrying activity and also contaminate the groundwater due to using of explosives.

Further he reported that the nagamani village which is very near to the proposed site affected by the dusts arises from the quarrying operation. And also, he informed that the advertisement for the Public Hearing was not made in advance through newspaper & place of Public Hearing was also not informed well in advance. He added that people don't read newspapers these days due to technology development and opposed the proposed project.

Thiru. Suresh, Maduranthagam has expressed his support for the project, the above protestors prevented him from speaking and the protesting people of Periya Venmani village asked other people to leave the meeting hall expect the people from the Periya Venmani Panchayat. They requested that the public hearing meeting should be held in Periya Venmani village and informed that views may be expressed only by the concerned village people and protested the views of the other villages. They requested to conduct the public hearing in the community hall with presence of VAO and Village president. They were disagreeing the proposed project and said that they will commit suicide if any permission granted to the proposed project. They also informed that the public hearing meeting should be postponed due to the absence of Periya Venmani village. It is submitted that the protestors refused to sign in the attendance sheet.

Further, 26 no of letters were received on the proposed rough stone and gravel quarry during public hearing meeting and the copy of letters were enclosed.

The District Environmental Engineer then thanked the Revenue Divisional Officer for presiding over the public hearing and the public on behalf of Tamil Nadu Pollution Control Board, for their participation.

The Meeting came to an end

List of Public attended the meeting along with photograph and videos of the entire proceeding of the Public Hearing recorded in the pen drive is enclosed herewith.

The copy of letters received ·from the public hearing is enclosed as Annexure

DISTRICT ENVIRONMENTAL ENGINEER
TNPCB

REVENUE DIVISIONAL OFFTCER
CHENGALPATTU DISTRICT

Encl: 1. Annexure-I (Copy of Attendance)
2. Annexure -II (Copy of letter received during public hearing)

தி/ள்.PCS இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களால் முன்மொழியப்பட்ட சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்காக பெரியவெண்மணி கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், புல எண்கள். 223/1, 223/2, 224, 225/1, 225/2 அமைவிடத்திற்கான மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் விபரங்கள்.

---

| | | |
|---|---|---|
| இடம் | : | ஸ்ரீ சரஸ்வதி மஹால்,<br>மதுராந்தகம் சாலை,<br>சரவம்பாக்கம் கிராமம்,<br>மதுராந்தகம் வட்டம்,<br>செங்கல்பட்டு மாவட்டம். |
| தலைமை | : | திரு. A. தியாகராஜன்<br>வருவாய் கோட்ட ஆட்சியர், மதுராந்தகம்.<br>செங்கல்பட்டு மாவட்டம். |
| ஒருங்கிணைப்பாளர் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்,<br>செங்கல்பட்டு மாவட்டம். |
| பங்கேற்பாளர்கள் | : | பொதுமக்கள் மற்றும் அரசு சாரா<br>அமைப்புகள் (66 நபர்கள் இணைப்பு – 1) |

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலின்படி கருத்து கேட்பு கூட்டத்திற்க்கு தலைமை தாங்க வந்த செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வருவாய் கோட்ட அலுவலரை மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் வரவேற்றார். செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியவெண்மணி கிராமம், புல எண்கள். 223/1, 223/2, 224, 225/1, 225/2 இல் முன்மொழியப்பட்ட தி/ள். PCS இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின்

உத்தேச திட்டத்திற்காக நடத்தப்பட்ட மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் வரவேற்றார்.

இத்திட்டம் குறித்து பங்கேற்பாளர்கள் தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவிக்குமாறு, வருவாய் கோட்ட அலுவலர், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் சுற்றுசூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்,மறைமலைநகர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கூறியதாவது பொதுமக்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் கேள்விகள் மற்றும் திட்ட முன்மொழிவோரின் பதில்கள் வீடியோ மூலம் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாகவும் தெரிவிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டது.

வருவாய் கோட்ட அலுவலர், செங்கல்பட்டு மாவட்டம் (மாவட்ட ஆட்சியரின் பிரதிநிதி, செங்கல்பட்டு) அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு பணியை துவக்கி வைத்தார். மேலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் ஆகியோர் முன்மொழியப்பட்ட திட்டம் குறித்து விளக்கமளிக்குமாறு திட்ட முன்மொழிவோரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதன்பின், தி/ள்: ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூஷன்ஸ் – தருமபுரி, தி/ள். PCS இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் திட்டத்திற்கான வரைவு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு, திட்டத்தின் செயல்பாடு சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் குறித்து விரிவான வீடியோ காட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்.

உத்தேசித்துள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துபூர்வமாக தெரிவிக்குமாறு வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அழைப்பு விடுத்தனர்.

பொதுமக்களின் பார்வைகள் மற்றும் பரிந்துரைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

1. திரு. கமலக்கண்ணன் பெரிய வெண்மணி கிராமம்:

திரு. கமலக்கண்ணன் கூறியதாவது இந்த கூட்டத்தில் பங்கேற்ற பொது மக்களில் நிறுவனத்தில் வேலை பார்ப்பவர்கள் எத்தனை பேர் என்று கேள்வி எழுப்பினர், வெண்மணி கிராமத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடப்பது பற்றி யாருக்கும் தெரியாது, மேலும் எங்கள் கிராமத்தில் 2000 மக்கள் 2000 ஆடு மாடுகள் இருக்கின்றன. இந்த திட்டத்திற்கு மேற்கு பகுதியில் உள்ள பூண்டி ஏரியிலிருந்து தண்ணீரானது கிராமங்களுக்கு இந்த சுரங்கதிட்டத்தின் வழியாகவே வரும் இந்த குவாரியினால் பள்ளம் ஏற்படும்போது தண்ணீர் வழியானது தடையாகும். மேலும் இதனால் 7 முதல் 8 கிராமங்கள் உள்ள விவசாயம் பாதிக்கப்படும் என்று கூறினார். தெற்கு பகுதியில் 200 வீடுகள் விரால் ஊராட்சியில் உள்ளனர். நீர் தேக்க தொட்டிசாலை வசதிகள் பாதிக்கப்படும் என்றார். மேலும் தெற்கு பகுதியில் உள்ள பிரதான சின்னமான பஞ்ச பாண்டவர் கோவில், நகுலன் கோயில், சிவன் கோயில், வைத்தீஸ்வரன் கோயில், பொன்னியம்மன் கோயில் மற்றும் அதில் உள்ள குளம் பாதிக்கப்படும் என்றார். இத்திட்டத்தின் வடக்குப்பகுதியில் 150 வீடுகள் இருப்பதாகவும் அரசு புறம்போக்கு நிலங்கள் குவாரியின் உள்ளே இருப்பதாக கூறினார். மேலும் 23 ஏக்கர் அரசு புறம்போக்கு இடமானது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறினார், குவாரியின்போது தூசியானது சாப்பிடும்போது உணவில் கலப்பதாக கூறினார். அரசு அதிகாரிகள் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கினால் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்படும் என்றார்.

2. திரு. மதன், பெரிய வெண்மணி கிராமம்:

எங்கள் கிராமத்தில் 20 அடி ஆழத்திற்கு தண்ணீர் கிடைக்கும் ஆனால் இத்திட்டமானது 35 மீட்டர் ஆழம் வரை போவதாக கூறியுள்ளனர். நிலம், நீர், சுற்றுச்சூழல் மண்வளம் காற்றுத்தரங்கள் முறையாக அளவீடு செய்யப்படவில்லை. வீடுகளில் எல்லா இடங்களிலும் தூசு படிவதாகவும் மேலும் படத்தில் சுட்டிக் காட்டியுள்ள கிணறானது தவறு என்று கூறினார்.

மேலும் வெடி மருந்து பயன்படுத்துவதால் தண்ணீரின் தரம் குறைந்துள்ளதாக கூறினார்.

மேலும் மிக அருகில் உள்ள நாகமலை கிராமத்தில் அதிக தூசு பரவுவதாக கூறினார். மேலும் இவர் பொது மக்கள் கூட்டம் குறித்த பத்திரிக்கை வெளியீட்டு செய்தியோ பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட இடத்தினையோ முன்னரே தெரியப்படுத்தவில்லை எனவும், தொழிற்நுட்பம் மாறி வருவதால் செய்தித்தாள் படிக்கும் பழக்கம் எங்கள் கிராமங்களில் இல்லை என்று தெரிவித்தார்.

3. திரு. சுரேஷ், மதுராந்தகம்:

இவர் திட்டத்திற்கு ஆதரவை தெரிவித்து கருத்து தெரிவிக்க ஆரம்பிக்கும் போதே மேலே எதிர்ப்பு தெரிவித்தவர்கள் தனது ஆதரவாளர்களுடன் பேசவிடாமல் தடுத்தனர் பெரிய வெண்மணி பஞ்சாயத்திற்குட்பட்ட மக்களை தவிர்த்து இதர மக்கள் வெளியேர வேண்டுமென பெரிய வெண்மணி கிராமத்தை சேர்ந்த மக்கள் கேட்டுக்கொண்டனர்

மேலும் இவர்கள் இந்த பொது மக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை பெரிய வெண்மணியிலேயே நடத்த வேண்டும் என்றும் ஊர் பொது மக்கள் மற்றும் குவாரியில் வேலை பார்க்கும் பெரிய வெண்மணி கிராம மக்களை தவிர்த்து இதர மக்கள் பேசுவதை தவிர்க்க வேண்டும் என்றும் பொது மக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை பெரிய வெண்மணியில் உள்ள சமுதாய கூடத்தில் நடத்தக் கேட்டுக்கொண்டனர். ஊர் பஞ்சாயத்து தலைவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் இல்லாமல் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துவதாக தெரிவித்தார்.

மேலும் இக்குவாரிக்கு அனுமதி அளித்தால் தீக்குளிப்போம் என கூச்சலிட்டனர். சம்பந்தப்பட்ட கிராம பொது மக்கள் பங்குபெறாத காரணத்தால் கருத்துக் கேட்புக் கூட்டத்தினை தள்ளிவைக்குமாறு கேட்டுக்கொண்டார்,

மேலும், எதிர்ப்பு தெரிவித்த எவரும் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் இடவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின்போது உத்தேச கற்கள் மற்றும் கிராவல் குவாரி குறித்து 26 கடிதங்களின் நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

முடிவாக இறுதியில் மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை வகித்த வருவாய் கோட்ட அலுவலருக்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில் பொதுமக்களுக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் நன்றி கூறினார்.

கூட்டம் இனிதே முடிவுற்றது

பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் முழுவதுமாக பதிவு செய்யப்பட ஒலி மற்றும் ஒளி அடங்கிய குறுந்தகடுகள் மற்றும் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியலும் இத்துடன் இணைக்கபட்டுள்ளது.

பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் இருந்து பெறப்பட்ட கடிதங்களின் நகல்கள் இணைக்கபட்டுள்ளது.

4/10/23

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்/
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்

4.10.2023

வருவாய் கோட்ட ஆட்சியர்
செங்கல்பட்டு மாவட்டம்

இணைப்பு

1. வருகைப் பதிவின் நகல்
2. கருத்துக் கேட்பு கூட்டத்தின் போது பெறப்பட்ட நகல்கள் –26